செ.வெ.எண்:05 நாள்:05.09.2018

கரூர் மாவட்டம்

**கரூர் மாவட்டத்திற்கு 07.09.2018 அன்று மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு.பன்வாரிலால் புரோகித் அவர்கள் வருகை தர உள்ளார்கள் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப.,அவர்கள் தகவல்**

கரூர் மாவட்டத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு.பன்வாரிலால் புரோகித் அவர்கள் 07.09.2018 அன்று வருகை தர உள்ளார்கள். அன்று மதியம் கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் அருகே அமைந்துள்ள அரசு சுற்றுலா மாளிகையில் பொதுமக்கள், அரசியல் கட்சி பிரமுகர்கள், தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் கோரிக்கை மனுக்கள் அளிக்க விருப்பமுள்ளவர்களிடமிருந்து மதியம் 2.30 மணி முதல் 4.30 மணி வரை மனுக்களை பெற்றுக்கொள்ள உள்ளார்கள்.

இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

வெளியீடு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
கரூர்.